## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 24/2023** **Date:16.09.2025**

**(PW1)- சண்முகம்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தானா என்றால் என்னுடைய கையெழுத்து தான். நிரூபண வாக்குமுலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து தான்கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை பெயர் பால சுப்பிரமணியன் என்றால் சரிதான். என்னுடைய பெயர் சண்முகம் என்றாலும் என் அப்பாவின் பெயர் சுயம்புலிங்கம் என்றாலும் சரிதான் . என் தந்தையுடன் பிறந்தவர்கள் 2 சகோதரர்களான சங்கரலிங்கம், பாலசுப்பிரமணியம் என்றால் சரிதான்.

. எனது அப்பாவும் அவர் உடன்பிறந்த சகோதரர்களும் 1951 ம் வருடத்தில் ஒரு பாக பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பாக பத்திரத்தின் படி 3 நபர்களுக்கும் சொத்துகள் பிரிக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். வழக்கு பட்டிகையாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் மேற்படி பாக பிரிவினையில் 3 நபர்களுக்கும் தலா 1 சென்ட் ஒதுக்கபபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாக பிரிவினை படி என் அப்பாவிற்கு கிடைத்த 1 சென்ட் சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. என் உடன் பிறந்தவர்களின் பெயர் என்ன என்றால் கிருஷ்ணன், மகாலட்சுமி அம்மாள், கங்காதரன், மணிகண்டன் ஆகும். எனது சித்தப்பாவான சங்கரலிங்கத்தின் வாரிசுகள் பெயர் என்ன என்றால் சந்திரதாஸ், சங்கரலிங்கம், ஜவஹர், மணியப்பா, சந்திரிகா தேவி, ரேவதி ஆகும். 1ம் பிரதிவாதியின் தாய் பாஞ்சாலி, சகோதரிகள் பாக்கியம் , சுசீலா, காலஞ்சென்ற கஸ்தூரி, காலஞ்சென்ற பிரேமா, ஜெயக்குமாரி, முருகேசன் மற்றும் பிரதிவாதி சண்முகம் என்றால் சரிதான், மேலும் மோகன் தாஸ், முருகேசன் , சேது ஆகியோர் உள்ளனர்.

4. வழக்கு பட்டிகை சொத்து பாக பத்திரத்தில் B பட்டிகை சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வாதுரையில் வழக்கு

பட்டிகை சொத்தின் ரீ சர்வே எண் 298/17 என்று குறிப்பிட்டு ள்ளேன் என்றால் சரியல்ல, 298/16, 298/17 என்று குறிப்பிட்டுள்ளேன். ஆனால் எனது பிராதில் 298/17 என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் நான் தற்போது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் தான் 298/16 சர்வே எண்ணை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன்.

5. நீதிமன்றத்தில் பழைய சர்வே எண் 5288 ற்கான புல ஒப்புமை சான்றை நான் தாக்கல் செய்யவில்லையென்றால் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி பழைய சர்வே எண் 5288 ற்கான புல ஒப்புமை சான்று என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பிவாசாஆ**. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தந்தையின் இறப்பிற்கு பின்பு எனது உடன் பிறந்தவர்களுடன் எனது தந்தைக்கு கிடைத்த சொத்தை பொறுத்து பாகம் செய்து கொண்டோமா என்றால் பாகம் செய்து கொள்ளவில்லை. பாக பிரிவினை படி கிடைத்த சொத்துகளை சங்கரலிங்கத்தின் வாரிசுகள் பாகம் பிரித்துகொண்டனர் என்றால் சரியல்ல.

6. 2014ம் வருடம் சங்கரலிங்கத்தின் வாரிசுகள் சங்கரலிங்கத்தின் சொத்தை பொறுத்து பாகம் செய்து கொண்டர்கள் என்றால் சரியல்ல, அனைத்து சொத்துகளை பொறுத்தும் பாகம் செய்யவில்லை. மேற்படி 2014ம் வருட பாக பிரிவினை பத்திரத்தில் D பட்டிகை 6ம் இன சொத்தாக வழக்கு பட்டிகை சொத்தின் அருகில் உள்ள சொத்து ஜவஹர் என்பவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தந்தை 2009ம் வருடம் இறந்து விட்டார் என்றால் சரிதான். வழக்கை சொத்தை அடையாளம் காட்டும் வரைபடமோ எந்த ஆவணமோ தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான்.

7. வழக்கு சொத்திற்கு எனது தந்தையின் காலத்திற்கு பின்பு என் பெயரிற்கோ, எனது சகோதராகள் பெயரிற்கோ வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்தேனா என்றால் மனு கொடுத்துள்ளேன், ஆனால் மாறவில்லை. பட்டாவிலோ அடங்கலிலோ என் பெயர் இல்லையென்றால் சரிதான். என் சொத்திற்கு நான்குபுறமும் எல்கை கற்கள் அமைத்துள்ளேனா என்றால் அமைத்துள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எல்கை கற்கள் அமைக்கவில்லையன்றாலும் சரியல்ல, பிரதிவாதி கற்களை அப்புறப்படுத்தி விட்டார்.

8. உட்பிரிவு செய்யப்படாத சொத்திற்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட எல்கை கற்கள் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என் அனுபவத்தில்

இல்லையென்றால் சரியல்ல, என் அனுபவத்தில் தான் உள்ளது. நான் இல்லாத சொத்திற்கும், அடையாளம் காட்டாத சொத்திற்கும் பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சொத்தை உட்பிரிவு செய்துள்ளேனா என்றால் உட்பிரிவு செய்ய மனு கொடுத்துள்ளேன்.

9. 1951 ம் வருட பாக பிரிவினை பத்திரப்படி பிரதிவாதியின் தந்தையான பாலசுப்பிரமணியன் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட வழக்கு பட்டிகை சொத்தானது 2005 ம் வருட பாக பிரிவினை பத்திரபடி முருகேசன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பட்டிகை சொத்து பிர திவாதியின் கைவசம் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி சா்வே எண் 297/17 ல் உள்ள சொத்தை உட்பிரிவு செய்து பிரித்து கொண்டார்கள் என்றாலும் அது தற்போது சா்வே எண் 297/17B என்றாலும் சரியல்ல. அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட காரணத்தினால் தான் நான் எனது பிராதில் ஒரு சா்வே எண்ணும், நிரூபண வாக்குமூலத்தில் இரண்டு சா்வே எண்ணும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, ஆட்சியரின் உத்தரவின் அடிப்படையில் கொடுத்துள்ளேன்.

10. புல எண் 295/16 ல் ஒரு கோவில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ. 1 ஆவணம் அங்கீகரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளரிடம் கொடுத்து மொழி பெயர்க்கப்படவில்லையென்றால் சரியல்ல. ஆனால் 1951 ம் வருடம் பாக பிரிவினை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன், ஆனால் மொழீ பெயர்ப்பு பத்திரத்தில் 1950 ம் வருடம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி பத்திரத்தை பதிவு செய்தது 1951 ம்வ ருடம் ஆகும், எழுதப்பட்டது 1950 ம் வருடம் ஆகும். வாசாஆ. 1 ஆவணம் நம்பத்தகுந்த ஆவணம் என்றால் சரியல்ல.

11. 1951 ம் வருடம் பாகபிரிவினை பத்திரப்படி எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்ட 1 சென்ட் சொத்து பழைய சா்வே எண் 5307 ல் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, 5288 ல் உள்ள சொத்து தான் எங்களுக்கு ஒதுக்கப்பட்டது. ரீ சா்வே எண் 295/3 ல் வாதியின் தந்தை மற்றும் உடன் பிறந்த சகோதரா்களுக்கு தலா 1 சென்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, மேற்படி சா்வே எண் சம்பந்தமில்லாத சா்வே எண் ஆகும். சா்வே எண் 295/3 ற்கான பட்டாவில் எனது அப்பா மற்றும் உடன் பிறந்த சகோதரா்களின் பெயர் காணப்படுகிறது என்றால் சரியல்ல, அது மோசடி ஆவணமாகும்.

12. நான் சம்பந்தமில்லாத சொத்திற்கு தற்போது உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. 1960 ம் வருடம் 2549/1960 ஆவண எண் படி பிரதிவாதியின் தந்தை பால சுப்பிரமணியன் அவா்கள் பழைய சா்வே எண் 5288 ற்கான ரீசா்வே எண் 298/17 ல்

2 ¾ சென்ட் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, அதில் எல்கைகள் தவறாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்ற சொத்து 1ம் பிரதிவாதிக்கு 2005 ல் ஏற்படுத்தப்பட்ட பாக பிரிவினை பத்திரப்படி கிடைத்த சொத்து என்றால் சரியல்ல.

13. வழக்கு சொத்தின் எல்கைகள் தவறு என்றால் சரியல்ல. ரீசர்வே எண் 298/17 ன் மொத்த விஸ்தீரணம் பற்றி என் பிராதில் குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் காம்பவுண்ட் கட்ட வந்ததாக நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் வழக்கு மூலத்திற்காக நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் என்னுடைய உரிமை மற்றும் அனுபவத்தை காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்